## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனி – 2015

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் (தனியார்) கம்பனியின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16**

நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 51,488 கிரயமான தளபாடங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வழுவை இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தம்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 24**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரினால் அதன் தாய்க் கம்பனியான வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திலிருந்து 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 20,000,000 தொகையான கடன் பணம் மற்றும் மேலும் செலுத்த வேண்டிய ரூபா 9,154,109 தொகை என்பன 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், நியமத்தின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பட்டோலையின் பிரகாரம் 05 சொத்துக்களுக்குரியதாக ரூபா 8,140,015 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய அறவீடுகள் நிலுவையாக இருந்த 05 வருடங்களை விஞ்சிய இடர்கடன் ரூபா 652,234 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 17 ஆந் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட இஸ்ரேல் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக இராணுவத் தலைமையகத்திற்குச் செலுத்தவேண்டி ஏற்பட்ட ரூபா 3,109,336 தொகை மற்றும் அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்குபற்றியிருந்த போதிலும் இஸ்ரேலில் வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறாத 402 பயிற்சியாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 1,687,805 தொகையான மீளச்செலுத்த வேண்டிய முற்பணம் என்பன கணக்காய்வுத் திகதியான

2016 பெப்ரவரி 16 வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2006 யூன் மாதம் முதல் 2007 சனவரி மாதம் வரை கொரியாவிற்கு குடியகல்ந்து சென்ற 824 பேருக்கு முகவராண்மையில் வைப்புச் செய்யப்பட்டு மீளச் செலுத்த வேண்டிய வைப்புக்களிலிருந்து ரூபா 17,085,000 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் குடியகல்ந்தோருக்கு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்குரியதாகச் செலுத்தவேண்டிய ரூபா 2,884,020 தொகையான மரண இழப்பீட்டுப் பணம் 2016 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் உரியதரப்பினரை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் நிதி விளைவுகள் ரூபா 896,118 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 35,270,469 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 34,374,351 வீழ்ச்சியொன்று ஏற்பட்டிருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டின் பற்றாக்குறையொன்று பெறப்பட்டிருந்த போதும் 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்து மிகையொன்று பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஊழியர் ஊதியம், அரச வரி மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கவனத்திற்கொள்ளும் போது முகவராண்மையின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த போதிலும், குடியகல்வோரை காப்புறுதிசெய்யும் முகவராக செயற்பட்டு பெறப்பட்ட காப்புறுதி வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 33,520,079 இனால் குறைவடைந்தமையின் காரணமாக 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் 97 சதவீதத்தாலும் பங்களிப்பு 52 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகவராண்மையின் நடைமுறை விகிதம் 1:1.6 ஆனமையால் மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் வெளிப்படுத்துவதற்கு போதியளவான நடைமுறைச் சொத்துக்கள் போதியளவில் முகவராண்மையிடம் காணப்படவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டில் பங்கொன்றின் உழைப்பு ரூபா 70.19 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் பங்கொன்றின் உழைப்பு ரூபா 1.79 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பங்கொன்றின் உழைப்பு 97 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) மீளாய்வாண்டில் முகவராண்மையின் செலவினங்களைத் தீர்ப்பதற்காக ரூபா 38,025,000 பெறுமதியான முதலீடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2006/2007 கணக்காண்டின் போது, இலாபப் பங்கு பிரேரிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் இலாபப் பங்கு 2013 ஆம் ஆண்டிலும் பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும் பிரேரிக்கப்பட்ட பங்கிலாபத்திலிருந்து பணியகத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா

3,510,033 தொகையைச் செலுத்தாது முகவராண்மையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மீண்டும் வருமானத்தில் சேர்க்கப்பட்டிருந்தது.

(உ) 20 மாதாந்த தவணைகளில் செலுத்தித் தீர்க்கும் அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திலிருந்து 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது பெறப்பட்டிருந்த ரூபா 20,000,000 கடன் பணம் தொடர்பாக, நிதிக் கஷ்டத்தின் காரணமாக இணங்கப்பட்ட உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு இணங்க செயற்பட முடியாதிருந்ததுடன் மேலும் செலுத்தவேண்டிய ரூபா 9,154,109 தொகை 5 சதவீத வட்டியில் மாதாந்தம் ரூபா 250,000 வீதம் 36 தவணைகளில் செலுத்துவதற்கு மீண்டும் தாய்க்கம்பனியின் இணக்கப்பாடு பெறப்பட்டிருந்தது.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகவராண்மை குறிப்பிட்ட காலத்தில் காப்புறுதி இழப்பீட்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காமையினால் ரூபா 228,395 தொகையான காப்புறுதி இழப்பீட்டு விண்ணப்பங்களை மீளளிப்பு செய்தல் காப்புறுதிக் கம்பனியினால் நிராகரிக்கப்பட்ட காரணத்தால் முகவராண்மைக்கு அப்பணம் உரிய காப்புறுதி நலனாளிகளுக்குச் செலுத்தவேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஆ) முகவராண்மைக்கும் பணியகத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட காப்புறுதி உடன்படிக்கைக்கு நேரொத்ததாக, முகவராண்மைக்கும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குமிடையே காப்புறுதி உடன்படிக்கை ஏற்படுத்தப்படாமையின் காரணமாக, ரூபா 2,000,000 தொகையான மரண இழப்பீட்டைச் செலுத்துதல் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த இழப்பீட்டுப் பணத்தைக் கம்பனி செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

(இ) முகவராண்மையால் உரிய கால எல்லையில் குறித்த பிரகாரம் பெறுமதிசேர் வரி சீராக்கங்கள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக 2010 ஆம் ஆண்டு முதல் ரூபா 2,459,015 கூட்டுத்தொகையான வரிச் சலுகையைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

### 3.4 ஏனைய அரச நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட முகவராண்மையின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம் பொது முயற்சியொன்றின் வளங்கள் ஏனைய பொது முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்கு அனுமதி வழங்கப்படாதிருந்த போதிலும் முகவராண்மையின் சாரதியொருவர் மகநெகும வீதி நிர்மாண இயந்திர உபகரண கம்பனியில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

இலங்கையிலோ அல்லது வெளிநாடுகளிலோ தொழில்ரீதியான, நிர்வாக ரீதியான தொழில்நுட்ப மற்றும் கைத்தொழில் பயிற்சி இடைக்காலப் பயிற்சி அல்லது பயிற்சிபெறாத வீட்டு மற்றும் ஹோட்டல் ஊழியர், ஆசிரியர்கள், சேவை வழங்குனர் மற்றும் சகல வகைகளுக்குரிய ஊழியர்களுக்காக தொழில்களைக் கையளித்தல் அல்லது வழங்கல் மற்றும் ஊழியர் பயிற்சி வழங்கல் மற்றும் நியதிச்சட்ட, சட்ட விதிகளுக்கு இணங்க பேணிச்செல்லல் முகவராண்மையின் பிரதான நோக்கங்களாகும்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றும் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) முகவராண்மையின் அடிப்படை நோக்கங்களுக்கிடையே வெளிநாட்டு தொழிற் சந்தைக்கு ஊழியத்தை வழங்குதல் பிரதான நோக்கமாக இருந்தபோதும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தைக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை நிறுவனங்களின் பங்களிப்பில் முகவராண்மை கைப்பற்றியுள்ள அளவு நூற்றுக்கு ஒரு சதவீதத்தையும்விட குறைந்த பெறுமதியில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **ஆண்டு** | **மொத்த வெளிநாடு செல்லல்** | **முகவராண்மை மூலம் வெளிநாடு செல்லல்** | **சந்தைப் பங்கு சதவீதமாக** |
|---|---|---|---|
| 2013 | 180,463 | 460 | 0.25 |
| 2014 | 177,099 | 529 | 0.30 |
| 2015 | 116,866 | 375 | 0.32 |

(ஆ) ஆட்சேர்ப்புக் கட்டணம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையாக செயற்படுவதற்காக பணியகத்திலிருந்து கிடைக்கின்ற கட்டணம் முகவராண்மையின் பிரதான வருமானமாக இருந்த போதிலும், அது மொத்த வருமானத்தில் 39 சதவீதமான குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வெளிநாட்டு தொழில் சந்தைக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் பங்களிப்பில் குறைவொன்று வெளிப்படுத்தப்பட்டதுடன் தொழில்சார், நடுத்தர திறன்கள், பயிற்சி மற்றும் வீட்டுச் சேவையாளர் என்ற மனித வலு மட்டத்தின் கீழ் வெளிநாட்டு தொழில் சந்தைக்காக ஏனைய வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்களின் பங்களிப்பு குறைவடையும் விகிதாசாரத்தைவிட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களிலிருந்து வெளிநாடு சென்ற ஊழியர் எண்ணிக்கை குறைவடையும் சதவீதம் உயர் பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **குடியகல்ந்த ஊழியர்களின் வகை** | **பதிவு செய்யப்பட்ட மூலகங்களிலிருந்து குடியகல்ந்து சென்றோர் எண்ணிக்கையின் குறைவு** | **முகவராண்மையின் குடியகல்ந்து சென்றோர் எண்ணிக்கையில் குறைவு** |
|---|---|---|
| | % | % |
| தொழில்சார் | 15 | 93 |
| நடுத்தர | 87 | 100 |
| பயிற்சி | 9 | 48 |
| வீட்டு சேவை | 19 | 58 |

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

முகவராண்மையின் செயற்பாடுகளின் கணக்காய்விற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றல்

குடியல்வோரின் பதிவுக் கட்டணத்தில் காப்புறுதிக்காக அறவிடப்படுகின்ற தவணைப் பணம் உள்ளடங்கியிருந்ததுடன் இடைத்தரகராக முகவர் தொடர்புபட்டமையின் காரணமாக குறித்த காப்புறுதி தவணைப் பணத்தைவிட கூடுதலான தொகையை சகல குடியகல்வோரிடமிருந்து அறவிட்டு முகவராண்மை வருமானம் உழைத்திருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகள் தீர்க்கப்படாமை<br>(ii) காப்புறுதிப் பணப் பெறுவனவு மற்றும் தீர்க்கும் நடவடிக்கைகள் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படாமை |
| (ஆ) | மனிதவள முகாமைத்துவம் | பௌதீக மற்றும் மனிதவள கட்டுப்பாடு மற்றும் பயன்படுத்தல்கள் வினைத்திறனானதாக மேற்கொள்ளப்படாமை. |